| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வெங்கடாஜலம் | நாள் | 12.11.2021 |
| தகப்பனார் பெயர் | ஏழுமலை | | |

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்.65/10 என்றால் ஆமாம். சர்வே எண்.65/10 வழக்கு தாக்கல் செய்யும்போது உட்பிரிவு செய்யபபட்டிருந்தது என்றால் இல்லை. 1984லேயே சர்வே எண்.65/10 உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது எனவும், அதனை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.13லேயே சர்வே எண்.65/10 உட்பிரிவு செய்யப்பட்டிருப்பது காணப்படுகிறது என்றால் உட்பிரிவு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 65/10 உட்பிரிவு செய்யப்பட்டு 65/10சி2 என ஆவணத்தை தாக்கல் செய்துள்ளனர் என்றால் இல்லை. தாசன் என்னுடைய பெரியப்பா மகன். மாதையன் என்னுடைய என்னுடைய பெரியப்பா மகன். அம்மாசி என்னுடைய தாயார். மற்றொரு மாதையன், ஏழுமலை, வெங்கடாஜலம் உள்ளிட்ட எங்களுடைய குடும்பத்தை சார்ந்தவருக்கு எதிராக அ.வ.எண்.183/2013ல் தீர்ப்பாகியுள்ளது என்றால் அதற்கு மனு தாக்கல் செய்துள்ளோம். 2014ல் தீர்ப்பானது எப்போது தெரியும் என்றால் அப்போதே தெரியும். உடனடியாக மனு தாக்கல் செய்துவிட்டோம். சர்வே எண்.65/10ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 92 சென்ட் உள்ளது. 1ம் பிரதிவாதி மாதையனின் தகப்பனார் பழனியப்ப கவுண்டர் என்றால் ஆமாம். அந்த 92 சென்டிற்கும் 1ம் பிரதிவாதி மாதையன் பெயருக்கு பட்டா வழுங்கப்பட்டுள்ளது என்றால் 1973ல் பழனிம்மாளுக்கு தான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. 1954லேயே வழக்கு சொத்துக்களை என்னுடைய தாத்தா கந்தப்பகவுண்டர் மற்றும் பழனியம்மாள் ராமசாமி, ஏழுமலையிடமிருந்து 1ம் பிரதிவாதியின் தாயார் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. 1954ல் ஏற்பட்ட கிரையத்தை மறைத்து பல ஆண்டுகளுக்கு பின்னிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏழுமலை என்னுடைய தகப்பனார். என்னுடைய தாத்தா, பெரியப்பா, பாட்டி, அத்தை, மாமா ஆகியோர் விற்பனை செய்ததற்கு பின்னிட்டு அதனை இல்லை என கூற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் மற்றும்

பெரியப்பா உயிருடன் இருக்கும்போதே பரிவர்த்தனை செய்யப்பட்டதன் அடிப்படையில் வழக்கு சொத்து முழுவதையும் 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. அவ்வாறு மாற்றியதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி 2வீடும், நாங்களும் வீடுகளை கட்டியுள்ளோம் என்றால் பழனியம்மாள் பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்தின் வடக்கே 1ம் பிரதிவாதியின் வீடும், தெற்கே எங்களுடைய வீடும் உள்ளது என்றால் ஆமாம். பொதுக்கிணறு உள்ளது என்றால் பொது இல்லை. எங்களுடையது. அந்த கிணற்றில் உள்ள உரிமையை மறுத்ததால் தான் அ.வ.எண்.183/2013 தீர்ப்பு ஏற்பட்டது என்றால் இல்லை.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.